DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:99/2018** **Deposition of Witness for : P.W.9**

| | | | |
|---|---|---|---|
| Name | : சோமசுந்தரம் | Calling | |
| Father's Name | : முத்துச்சாமி | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 10-02-2026

முதல் விசாரணை

நான் சேலம் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.03.2015 நான் தாராபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மதுவிலக்கு பிரிவில் கூடுதல் பொறுப்பை கவனித்து வந்தேன். குற்றவியல் நீதித்துறை நடுவர் காங்கயம் அவர்களின் உத்தரவுப்படி 10.03.2015 ஆம் தேதி காலை 10:30 மணிக்கு சென்னை புழல் சிறையில் இருந்த எதிரி சுரேஷ் என்கிற சுரேஷ்குமார் என்பவரை சம்பிரதாய கைது செய்து 31.03.2015 ஆம் தேதி காங்கேயம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் PT Warrant ன் மூலம் ஆஜர் செய்தேன். பின்னிட்டு 22.04.2015 ஆம் தேதி மதுவிலக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் மத்திய சென்னை புழல் சிறைக்கு கொடுக்கப்பட்டதன் பேரில் நான் 27.04.2015 ஆம் தேதி மேற்படி சென்னை புழல் சிறையில் இருந்த எதிரி சுரேஷ் என்பவரை ஜெயிலர் முன்னிலையில் விசாரித்து அவரது ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டார். இத்துடன் மேற்படி

வழக்கில் என்னுடைய விசாரணை முடித்து மேல்விசாரணைக்காக ஆய்வாளர் முருகேசன் என்பவர் வசம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

**1 மற்றும் 8 எதிரிகள் காணொலி வாயிலாக ஆஜர் செய்யப்பட்டார் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**2, 6, 7, 9, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் ஒன்றாம் தேதி தவிர வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்

**5 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.10 19:30:59 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 99/2018 Deposition of Witness for : P.W.10**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Calling | |
| Father's Name | : துரைப்பாண்டி | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 10-02-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது தென்காசி மாவட்டம் மதுவிலக்கு பிரிவில் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணியாற்று வருகிறேன். இதற்கு முன்பு தாராபுரம் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.09.2016–ம் தேதி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கூடுதல் பொறுப்பாக எடுத்துக் கொண்டு இந்த வழக்கை நான் என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கு கோப்பை பார்வையிட்டேன். இந்த வழக்கில் ஆய்வாளர்கள் கதிரவன் மற்றும் சோமசுந்தரம் ஆகியோர் முதல் கட்ட விசாரணையை நடத்தி முடித்துள்ளார்கள். வழக்கு கோப்பை பார்வையிட்டேன் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். சாட்சிகளை விசாரித்தேன் சாட்சிகள் அனைவரும் அவர்களை முன்பு விசாரணை செய்த விசாரணை அதிகாரியிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் அவர்களது வாக்குமூலத்தை நான் தனியாக பதிவு செய்யவில்லை. இந்தவழக்கில் கதிரவன் ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்துள்ளார். அவர் இந்த வழக்கில் பதிவு செய்த புகார் அ.சா.ஆ.23 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.24 (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் ).

2. இந்த வழக்கில் 27.09.2016 ஆம் தேதி எரிசாராயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய கோவை தடயவியல் ஆய்வக அலுவலர் திரு விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்த சென்னை தடைய அறிவியல் ஆய்வக அலுவலர் திரு முத்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு ஜெய் சிங் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காங்கேயம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் அருக்காணி அவர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு என்னுடைய வழக்கின் விசாரணை முடித்து 28.9.2014 ஆம் தேதி எதிரிகள் சுரேஷ் என்கிற சுரேஷ்குமார், ராமச்சந்திரன், காளியப்பன், பொன்மணி என்கிற பொண்ணாத்தாள் பூபதி சரவணகுமார் மணிகண்டன் செவ்வந்து அப்பான் என்கிற மகேஸ்வரன், நாகராஜ் ஆகியோர் மீது பிரிவு 4(1)(aaa), 4(1–A) TNP Act r/w 5, 6, 9 TNRS rules மற்றும் 468, 471 இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 மற்றும் 8 எதிரிகள் காணொலி வாயிலாக ஆஜர் செய்யப்பட்டார் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

<u>2, 6, 9, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. குட்டை காட்டு பிரிவு என்பது வாகன போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரியல்ல. அது வெள்ளகோவில் இருந்து கோயம்புத்தூர் செல்லும் முதன்மைச் சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையில் இருந்து தான் குட்டைக்காடு பிரிவு பிரிகிறது என்று சொன்னால் சரிதான். ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் இருக்கும் மேற்படி பகுதியும் பிரதான சாலை என்று சொன்னால் சரிதான். அங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரியல்ல வாகன போக்குவரத்து இருக்கும். நான் பொதுமக்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. இந்த இந்த வழக்கில் பொதுமக்கள் சாட்சி யாரையும் நான் இறுதி அறிக்கையில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. வழக்கு பதிவு செய்து ஐந்து வருடங்கள் காலதாமதத்துடன் நான் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல மூன்று வருடம் கழித்து இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறுதியறிக்கையை கடந்த 11.09.2017 ம் தேதி தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி குற்றஇறுதியறிக்கை சாடசிகளின் வாக்குமூலங்கள் இணைக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னார்லசரிதான். மேற்படி திருப்பப்ட்ட குற்ற இறுதியறிக்கை எ.த.சா.ஆ.1. அதன் பிறகு 20.03.2018 ஆம் தேதி மேற்படி இறுதியறிக்கை திரும்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அப்போது நான் பணி மாறுதல் ஆகிவிட்டேன். மேற்படி இடைப்பட்ட காலத்தில்தான் சாட்சிகளின் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 161 கீழான வாக்குமூலங்கள் காவல் நிலையத்தில் வைத்து காவல்துறையினரால் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகளை நான் அழைப்பானை அனுப்பி தான் வர வைத்து விசாரித்தேன். மேற்படி அழைப்பானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு எந்தவிதமான சாட்சியையும் நான் அழைப்பானை அனுப்பி வரவைத்து விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த வழக்கில் எரிசாரத்தை கைப்பற்றிய ஆய்வாளர் அளவுமாணியை வைத்து அதை அளந்துள்ளார் மேற்படி சங்கதி என்னுடைய இறுதி அறிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எந்தவிதமான அளவீடும் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2,6, மற்றும் 9 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் சட்டப்படி நடைமுறைகளை பின்பற்றி வாங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2, 6 மற்றும் 9 எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த விதமான சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை எங்கு வைத்து பாதுகாக்கப்பட்டது என்ற விவரத்தை என்னுடைய இறுதி

அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஆய்வகத்தில் எந்த இடத்தில் எப்படி பாதுகாக்கப்பட்டது என்பது குறித்து என்னுடைய விசாரணையில் நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த இது வழக்கில் கதிரவன் என்பவர் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட விசாரணையை செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக அவர் தன்னுடைய புலன் விசாரணை அறிக்கையை என்னிடம் சமர்ப்பித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தான் தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கையானது தவறானது என்று சொன்னால் சரியல்ல. அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

4. எதிரிகள் தங்களுக்குள் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை காட்ட அவர்களது செல்போன் அழைப்பு அறிக்கையை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எரி சாராயம் தயார் செய்ததாக கூறப்படும் குட்டை காட்டு தோட்டத்தில் நான் கைரேகை மற்றும் கால் தடங்களை சேகரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் குற்றவியல் நடைமுறை சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றாமல்இந்த வழககில் போலீசாரை கைப்பற்றுதல் சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரயல். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இந்த வழக்கில் தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**5 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5. இந்த வழக்கில் விஷ சாராயம் அருந்தி பாதிக்கப்பட்டதாக யாரும் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் பத்தாம் எதிரியிடமிருந்து எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை அதன் அடிப்படையில் சான்று பொருள்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஐந்து மற்றும் பத்து எதிரிகளுக்கு இந்த வழக்கு

சம்பவத்துடன் தொடர்பில்லை என்றாலும் அவர்கள் இந்த வழக்கில் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.10 19:31:09 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.